


. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936




www.dhinatamil.com
மாற்றத்தின் ஆரம்பம்
dhinatamil

.நாகர்கோவில் பதிப்பு.24.02.2026 . மலர் 04 . இதழ் 54. செவ்வாய்கிழமை
. NAGERCOIL EDITION .24.02.2026 . VOL 04 . ISSUE 54. TUESDAY . 4 PAGES . Rs. 5

## தமிழகத்தில்

# 5.67 கோடி வாக்காளர்கள்

## 74 லட்சம்+ பெயர்கள் நீக்கம் !

சென்னை: பிப்.24-

தமிழகத்தில் மொத்தம் 5.67 கோடி வாக்காளர்கள் இருப்பதாக, மாநில தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ள இறுதி வாக்காளர் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2025ல் தமிழக வாக்காளர்களின் எண்ணிக்கை 6.41 கோடியாக இருந்த நிலையில், தற்போது அந்த எண்ணிக்கை 5.67 கோடியாக குறைந்துள்ளதால், சமீபத்திய எஸ்ஐஆர் நடவடிக்கை மூலம் தமிழகத்தில் நீக்கப்பட்ட பெயர்களின் எண்ணிக்கை 74 லட்சமாக உள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பு “27.10.2025 தேதியின் நிலவரப்படி, 6,41,14,587 வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருந்தனர். சிறப்பு தீவிர திருத்தம் 2026இன் கீழ் கணக்கெடுப்பு கட்டம் முடிந்த பிறகு, மொத்தம் 5,43,76,756 வாக்காளர்களின் பெயர்களைக் கொண்ட வரைவு பட்டியல் 19.12.2025 அன்று வெளியிடப்பட்டது.

அதைத் தொடர்ந்து, 19.12.2025 முதல் 30.01.2026 வரையிலான ஏற்புரைகள் மற்றும் மறுரைப்புரைகளுக்கான காலத்தில், 27.53 லட்சம் தகுதியுள்ள வாக்காளர்கள் சேர்க்கப்பட்டனர். மேலும் 4.23 லட்சம் தகுதிபெறாத நபர்கள் நீக்கப்பட்டனர். அதன்படி, தகுதியுள்ள வாக்காளர்களைக் கொண்ட 2026ன் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

அந்தப் பட்டியலில், தமிழகத்தில் மொத்தம் 5,67,07,380 வாக்காளர்கள் உள்ளனர். அதில், ஆண் வாக்காளர்கள் 2,77,38,925, பெண் வாக்காளர்கள் 2,89,60,838 மற்றும் மூன்றாம் பாலினத்தவர் 7,617 நபர்கள் உள்ளனர்.

இன்றைய நிலவரப்படி, இதில் 1819 வயதுக்குட்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 12.51 லட்சம், மாற்றுத் திறனாளிகள் எனக் குறிக்கப்பட்ட வாக்காளர்கள் 4.63 லட்சம் மற்றும் 85 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் வாக்காளர்கள் (85+ வயதினர்) 3.99 லட்சம் ஆகும்.

மேலும், இறுதி வாக்காளர் பட்டியலின்படி, செங்கல்பட்டு மாவட்டத்திற்குட்பட்ட 27சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி தமிழ்நாட்டிலேயே அதிக வாக்காளர்களைக் கொண்டுள்ளது. இத்தொகுதியில்




மொத்தம் 5,36,991 வாக்காளர்கள் உள்ளனர். (ஆண்கள் 2,62,621; பெண்கள் 2,74,254 ; மூன்றாம் பாலினத்தவர் 116).

இதற்கு அடுத்தப்படியாக திருவள்ளூர் மாவட்டத்திற்குட்பட்ட 6ஆவடி சட்டமன்ற தொகுதி உள்ளது. இத்தொகுதியில் மொத்தம் 4,28,772 வாக்காளர்கள் உள்ளனர். (ஆண்கள் 2,09,662 பெண்கள் 2,19,035; மூன்றாம் பாலினத்தவர் 75) உள்ளனர்.

தமிழ்நாட்டிலேயே குறைந்த அளவு வாக்காளர்கள் கொண்ட தொகுதியாக சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 18 துறைமுகம் சட்டமன்றத் தொகுதி உள்ளது. இத்தொகுதியின் மொத்த வாக்காளர்கள் 1,16,896 ஆவர். (ஆண்கள் 58,221; பெண்கள் 58,620; மூன்றாம் பாலினத்தவர் 55).

இதற்கு அடுத்தப்படியாக இரண்டாமிடத்தில் சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16எழும்பூர் சட்டமன்ற தொகுதி உள்ளது. இத்தொகுதியின் மொத்த வாக்காளர்கள் 1,34,879ஆவர் (ஆண்கள் 65,677, பெண்கள் 69,149: மூன்றாம் பாலினத்தவர் 53).

வாக்காளர் பட்டியலினை, தலைமைத் தேர்தல் அதிகாரியின் வலைதளமான https://elections.tn.gov.in என்ற வலைதளத்திலும் காணலாம். அதில் வாக்காளர்கள் தங்கள் பெயரைச் சரிபார்த்துக் கொள்ளலாம். வாக்காளர் பதிவு அலுவலரின் முடிவுக்கு எதிரான மேல்முறையீட்டை மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1950 பிரிவு 24(a) மற்றும் வாக்காளர் பதிவு விதிகள், 1960இன் விதி 27 இன் கீழ் 15 நாட்களுக்குள் மாவட்ட ஆட்சியரிடம் மேல்முறையீடு செய்யலாம்.

முதல் மேல்முறையீட்டு தீர்ப்பில் அதிருப்தி அடைந்தால், மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம். 1950 பிரிவு 24(b) மற்றும் வாக்காளர் பதிவு விதிகள், 1960 இன் விதி 27ன்படி மாவட்ட ஆட்சியரின் உத்தரவு வழங்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் தலைமை தேர்தல் அதிகாரியிடம் இரண்டாவது மேல்முறையீடு தாக்கல் செய்யலாம்.

வாக்காளர்கள் தங்களது பெயர் வாக்காளர் பட்டியலில் உள்ளதா என்பதை சரிபார்த்து, தேவையானால் பெயர் சேர்க்க (படிவம்6), திருத்தம் (படிவம்8) அல்லது நீக்கம் (படிவம்7) செய்வதற்கான விண்ணப்பங்களை இணையம் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

18-19 வயதுக்குட்பட்ட முதல் முறையாக வாக்காளர்களாக பதிவு செய்தவர்களுக்கும், திருத்தங்களுக்கு விண்ணப்பித்த அல்லது தமிழ்நாட்டிற்கு இடம்பெயர்ந்த ஏற்கனவே உள்ள வாக்காளர்களுக்கும், அவர்களின் பதிவு செய்யப்பட்ட குடியிருப்பு முகவரிக்கு விரைவு அஞ்சல் மூலம் வாக்காளர் அடையாள அட்டை (EPIC) வழங்கப்படும்.

தொடர் திருத்தக் காலம், 23.02.2026 முதல் நடைமுறையில் உள்ளது. 01.01.2026 அன்று 18 வயது பூர்த்தியடைந்த, ஆனால் வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயர்கள் இல்லாத அனைத்து தகுதியுள்ள குடிமக்களும் பின்வரும் வழிகளில் விண்ணப்பிக்கலாம்:

1. வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகத்தில் படிவம் 6ஐ சமர்ப்பித்து விண்ணப்பிக்கலாம்.

2. இணையம் மூலமாக https://voters.eci.gov.in-/என்ற வலைதளத்திலும் விண்ணப்பிக்கலாம்.

3. கூகுள் பிளே ஸ்டோரிலிருந்து ‘Voter Helpline App’ செயலியைத் தரவிறக்கம் செய்து அதன்மூலம் விண்ணப்பிக்கலாம் அல்லது வாக்குச்சாவடி நிலை அலுவலர் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம்.

4. பொதுமக்கள் மாவட்ட தொடர்பு மையங்களை ‘1950’ என்ற கட்டணமில்லாத் தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தேர்தல் தொடர்பான தகவல்களை அறியலாம். தலைமைத் தேர்தல் அதிகாரியின் அலுவலகத்தில் 180042521950 என்ற கட்டணமில்லாத் தொலைபேசி எண்ணுடன் மாநிலத் தொடர்பு மையம் இயங்கி வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## “நீக்கப்பட்ட 328 உதவி பேராசிரியர்களை பணி நிரந்தரம் செய்க” அண்ணாமலை

சென்னை, பிப், 24-

பணி நீக்கம் செய்யப்பட்ட அண்ணா பல்கலைக்கழக உறுப்பு கல்லூரி உதவிப் பேராசிரியர்கள் 328 பேரை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று தமிழக அரசை, அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், ‘‘தமிழகம் முழுவதுமுள்ள அண்ணா பல்கலைக்கழகத்தின் 16 உறுப்புக் கல்லூரிகளில், சுமார் 15 ஆண்டுகளாக பணியாற்றி வந்த 328 உதவிப் பேராசிரியர்களை, நிதி நிலைமை காரணம் கூறி, கடந்த ஜனவரி 31 அன்று பணிநீக்கம் செய்தது திமுக அரசு.

இந்த நிலையில், ஆசிரியர்கள் இல்லாததால், தமிழ் உட்பட பல்வேறு பாடங்களுக்கு, கடந்த இரண்டு மாதங்களாக வகுப்புகளே நடைபெறவில்லை. ஆனால், இன்று முதல் உள் தேர்வுகள் தொடங்கவிருக்கின்றன. இதனால், அண்ணா பல்கலைக்கழக மாணவர்கள், குழப்பத்தில் இருக்கிறார்கள். வகுப்பே நடத்தப்படாமல், மாணவர்களை உள் தேர்வு எழுதச் சொல்லுவது, கல்வி முறைக்கே அவமானம். தமிழ் பாடத்துக்கே ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை என்பதுதான், திமுக அரசு தமிழை வளர்க்கும் லட்சணம். அண்ணா பல்கலைக்கழகத்தில் மட்டுமே, சுமார் 45.44% ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. பத்து ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி வருபவர்களைப் பணி நிரந்தரம் செய்யாமல், காலிப் பணியிடங்களையும் நிரப்பாமல், மாணவர்களின் கல்வியை கேள்விக் குறியாக்கியிருக்கிறது திமுக அரசு.

பத்து ஆண்டுகளுக்கும் மேல்



தற்காலிகப் பணியாற்றுபவர்களைப் பணி நிரந்தரம் செய்வோம் என்று தேர்தல் வாக்குறுதி எண் 153 ல், கூறியிருந்த திமுக, அவர்களைப் பணி நீக்கம் செய்ததோடு மட்டுமல்லாமல், புதிய நியமனங்களையும் மேற்கொள்ளவில்லை.

அண்ணா பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு, ஊதியம் வழங்க நிதி இல்லை என்று கூறி, மாணவர்களின் கல்வியை பாழாக்கிவிட்டு, இந்த ஆண்டு திமுக அரசு அறிவித்த பட்ஜெட்டில், அண்ணா பல்க லை க் கழகத்தை தரம் உயர்த்த ரூ.1,380 கோடி வரை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது தான், இந்த ஆண்டின் மிகப்பெரிய நகைச்சுவை. பொய்யான விளம்பரங்களை வைத்தே மக்களை ஏமாற்றி விடலாம் என்று கனவு காண்கிறார் முதல்வர் மு.க. ஸ்டாலின்.

உடனடியாக 328 பகுதி நேர ஆசிரியர்களையும் பணி நிரந்தரம் செய்து, மீண்டும் வகுப்புகளை தொடங்கி, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் கல்வி உரிமையை பாதுகாக்க வேண்டும் என்று, திமுக அரசை வலியுறுத்துகிறேன்’’ என்று தெரிவித்துள்ளார்.

## மதுரையில் மூத்த பத்திரிகையாளர் T.அன்பழகன், இந்திராணி ஆகியோர் மகள் திருமண விழா


மதுரை. பிப். 24

மதுரை மூத்த பத்திரிகையாளர் T.அன்பழகன், இந்திரா தம்பதியரின் மகள் திருமண விழா கோலாகலமாக நடைபெற்றது.

மணமக்கள்
S.ராஜநாராயணன்.
பொறியாளர்
A.தங்கராணி
பொறியாளர்

ஆகியோர் திருமண விழா மதுரை திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் நேற்று முன்தினம் இரு வீட்டார் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த விழாவின் மற்ற வைபவங்கள் சிவகங்கை



மதுரையில் நடைபெற்ற மூத்த பத்திரிகையாளர் T.அன்பழகன் மகள் திருமண வரவேற்பு விழாவில் தின தமிழ் நாளிதழ் நிறுவனத்தின் சார்பில் இணை ஆசிரியர் கு.சக்திமுருகன் கலந்து கொண்டு மணமக்களுக்கு வாழ்த்து தெரிவித்த போது எடுத்த படம்

மாவட்டம் பட்டமங்களத்தில் மணமகன் இல்லத்தில் நடைபெற்றது

இதன் வரவேற்பு விழா மணமகள் வீட்டார் சார்பில் மதுரை காமராஜர் சாலையில் உள்ள தொழில் வர்த்தகம் அரங்கில் வெகு விமரிசையாக நடைபெற்றது. இதில் இரு வீட்டாரின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வருகை புரிந்து மணமகளுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

இதற்கான ஏற்பாடுகளை மணமகள் குடும்பத்தினர் சிறப்பாக செய்திருந்தனர்.


## சீமான் போட்டியிடுவதால் நட்சத்திர தொகுதியாக மாறிய காரைக்குடி

காரைக்குடி, பிப். 24-

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் காரைக்குடியில் போட்டியிடுவதால் அத்தொகுதி நட்சத்திர தொகுதியாக மாறியுள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கை, மானாமதுரை, காரைக்குடி, திருப்பத்தூர் ஆகிய 4 தொகுதிகள் உள்ளன.

இதில் 3 தொகுதிகளுக்கு 8 மாதங்களுக்கு முன்பே நாம் தமிழர் கட்சியில் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டனர். ஆனால், காரைக்குடி தொகுதிக்கு மட்டும் அமைதி காத்து வந்தனர்.

அப்போதே இத்தொகுதியில் சீமான் போட்டியிடுவார் எனப் பேசப்பட்டது. அது தற்போது திருச்சி மாநாட்டில் உறுதி செய்யப்பட்டுள்ளது.



இதன்மூலம், காரைக்குடி நட்சத்திரத் தொகுதியாக மாறியுள்ளது.

சீமான் 2016ல் கடலூர் தொகுதியிலும், 2021ல் திருவொற்றியூரிலும் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தார். ஆனால், இந்த முறை எப்படியும் வெற்றி பெறவேண்டுமென முனைப்புக் காட்டி வருகிறார்.

இதற்காக, அவர் தனது சொந்த மாவட்டத்தைத் தேர்வு செய்துள்ளதாகக் கூறுகின்றனர். ஓராண்டுக்கு முன்பே, செய்தியாளர்கள் சந்திப்பின்போது சொந்த மண்ணில் போட்டி யிடுவேன் என்று சீமான் கூறியிருந்தார்.

அப்போதிலிருந்தே நாம் தமிழர் கட்சி யினர் காரைக்குடி தொகுதியில் தீவிரமாகத் தேர்தல் பணியில் ஈடுபட்டனர். கடந்த ஆண்டு நவம்பர் 27ம் தேதி காரைக்குடியில் மாவீரர் தினப் பொதுக்கூட்டத்தைக்கூட பிரம்மாண்டமாக நடத்தினர்.

கடந்த தேர்தலில் காரைக்குடியில் போட்டியிட்ட நாம் தமிழர் வேட்பாளர் துரை மாணிக்கம் 23,872 வாக்குகள் (11.24 சதவீதம்) பெற்றார். இந்தத் தொகுதியில் கடந்த முறை காங்கிரஸ், பாஜகதான் போட்டியிட்டன.

அதில் காங்கிரஸ் வெற்றிபெற்று மாங்குடி எம்எல்ஏவாக உள்ளார். இந்த முறையும் அவர் சீட் கேட்டு காய் நகர்த்தி வருகிறார். தேசிய ஜனநாயகக் கூட்டணி யில் பாஜக சார்பில் மாவட்டத் தலைவர் பாண்டித்துரையும், அமமுக சார்பில் மாவட்டச் செய லாளர் தேர்போகி பாண்டியும் சீட் கேட்டு வருகின்றனர்.

தவெகவில் மாவட்டச் செயலாளர் மருத்துவர் பிரபு போட்டியிடுவதற்காக கடந்த ஓராண்டாக அனைத்து வேலைகளையும் செய்து வருகிறார். இந்த முறையும் திமுக, அதிமுக நேரடியாக களத்தில் இறங்காமல், கூட்டணிக் கட்சிகளுக்கே ஒதுக்க வாய்ப்புள்ளது என்று கூறப்படுகிறது.

# தமாகா சார்பில் 500 மாணவர்களுக்கு நீட் தேர்வுக்கான இலவச கையேடு



ஈரோடு பிப்.24-

ஈரோடு கிழக்கு தொகுதியில் த மா கா சார்பில் இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு மருத்துவம் படிக்கும் மாணவர்களுக்கு நீட் தேர்வுக்கான இலவச கையேடும் வழங்கப்பட்டு வருகிறது.

இதேபோல் ஈரோடு ஆரிய வைசியர் மண்டபத்தில் இலவச கையேடு வழங்கும் நிகழ்ச்சி மாநில பொருளாளர் விடியல் சேகர் தலைமையில் நடந்தது. பொது க்குழு உறுப்பினர் சந்திர சேகர் முன்னிலை வகித்தார்.

மாநில பொது செயலாளர் யுவராஜா 500 மாணவர்களுக்கு மருத்துவ படிப்புக்கான நீட் தேர்வு க்கான இலவச கையேடுகளை வழங்கி பேசினார்.

அப்போது அவர் கூறும் போது வருகிற சட்ட சபை தேர்தலின் போது தி மு க மீண்டும் நீட் தேர்வு ரத்து செய்யப்படும் என்று பொய்யான வாக்குறுதிகளை கூறி ஏமாற்றுவார்கள். இந்த வாக்குறுதியை இனியும் யாரும் நம்ப மாட்டார்கள். எனவே மருத்துவம் படிக்கும் மாணவ மாணவிகள் நன்றாக படித்து நீட் தேர்வில் வெற்றி பெற வேண்டும். என்று கூறினார்.

நிர்வாகிகள் சஞ்சய் மாயா வெங்கடேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# தேமுதிக கட்சி அலுவலகத்தில் தொடங்கிய நேர்காணல்



சென்னை பிப். 24-

சென்னை கோயம்பேட்டில் உள்ள தேமுதிக அலுவலகத்தில் சட்டமன்ற தேர்தலில் போட்டியிட விருப்பமனு கொடுத்தவர்களிடம் நேர்காணல் கழக பொதுசெயலாளர் பிரேமலதாவிஜயகாந்த் தலைமையில் பிப்ரவரி 20 முதல் மூன்று நாட்கள் நடைபெற்று வருகிறது. முதல் நாளன்று சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், செங்கல்பட்டு, உள்ளிட்ட மாவட்டங்களுக்கு விருப்பமனு கொடுத்தவர்களுக்கான நேர்காணல் நடைபெற்று வரும் நிலையில், அரக்கோணம் தனி தொகுதிக்கான நேர்காணலில் முன்னாள் ஒன்றிய கவுன்சிலரும், கழக தொண்டரணி துணைச் செயலாளருமான செ.தினகரனிடம் நேர்காணல் நடைபெற்றது. அப்போது தொகுதி வளர்ச்சி, கழகத்திற்கு ஆற்றிய பணி, தேர்தல்செயல்பாடுகள் குறித்து மாநில கழக நிர்வாகிகள் கேட்டறிந்தனர். இந்த நேர்கானல் நிகழ்ச்சியின் போது கழக அவைத்தலைவர் இளங்கோ, கழக பொருளாளர் எல்.கே.சுதீஷ், தலைமை நிலையச் செயலாளர் பார்த்தசாரதி, கொள்கைபரப்புச் செயளாளர் அழகாபுரம் மோகன்ராஜ் ஆகியோர் உடனிருந்தனர்

# ஆனைமலை புலிகள் காப்பகம் டாப்ஸ்லிப் பகுதிக்கு ரெடிங்டன் தொண்டு நிறுவனம் சார்பில் நலத்திட்ட உதவி



கோவை பிப்: 24-

சென்னையைச் சேர்ந்த ரெடிங்டன் அறக்கட்டளை சார்பில் ஆனைமலை புலிகள் காப்பகம் டாப்ஸ்லிப் பகுதிகளில் உள்ள மலைவாழ் மக்களுக்கும், டாப்ஸ்லிப் வனபகுதிக்கும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கினர்.

அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோவில் மேனாள் அறங்காவலர் குழுத் தலைவர் எஸ். முரளிகிருஷ்ணன் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, ஆனைமலை புலிகள் காப்பகமான டாப் சிலிப் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சமூக மேம்பாட்டுக்காக ரூ.20 இலட்சம் மதிப்பிலான திட்டங்களை ரெடிங்டன் அறக்கட்டளை நலத்திட்ட உதவிகளை வழங்கியுள்ளது.

அடர்ந்த வனப்பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினக் குழந்தைகள் கல்வி கற்பதற்குப் போக்குவரத்து ஒரு பெரிய தடையாக இருந்தது. இதைச் சரிசெய்ய, பாதுகாப்பான வாகன வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் குழந்தைகளின் தொடர்ச்சியான பள்ளி வருகையை உறுதி செய்ய மாணவர்களுக்கான போக்குவரத்து வசதிக்காக ரூபாய் 14 இலட்சம் மதிப்பில் வாகனம் உட்பட பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது.

சுற்றுலாப் பயணிகள் அதிகம் வரும் பகுதிகளில் வனவிலங்குகள் பிளாஸ்டிக் மற்றும் உணவுப் பொருட்களை உட்கொள்வதைத் தடுப்பதோடு, காடு தூய்மையாக இருக்கவும் உதவும் வகையில் 30 வலுவான மூடிய இரும்பு வலைக் குப்பைத் தொட்டிகள் நிறுவப்பட்டுள்ளன.

வனவிலங்குகள் சாலை விபத்துகளில் சிக்காமல் தடுக்கவும், பயணிகளின் பாதுகாப்பை மேம்படுத்தவும், வனச்சாலைகளில் வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்தவும், ஓட்டுநர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் சாலை விழிப்புணர்வு எச்சரிக்கைப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் வன அலுவலர். வெங்கடேஷ், ரெடிங்டன் அறக்கட்டளையின் அறங்காவலர் சீதா துருவா, ரவி சங்கர், பிரவீன் குமார், கோபி வெங்கடாச்சலம், கவிஞர் புன்னகை பூ ஜெயக்குமார், சூழலியல் எழுத்தாளர் கோ.லீலா, விக்ரம் முத்துரத்தின சபாபதி, வி. பாலசுப்ரமணியன் புதுஇலை அறக்கட்டளையினர் உடன் ரெடிங்டன் அறக்கட்டளையின் முக்கிய அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஐந்து சட்டமன்ற தொகுதிகளுக்கான இறுதி வாக்காளர் பட்டியலை மாவட்ட தேர்தல் அலுவலர் ஆட்சித்தலைவர் சதீஷ் வெளியிட்டார்



தருமபுரி பிப். 24-

தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஐந்து சட்டமன்ற தொகுதிகளுக்கான இறுதி வாக்காளர் பட்டியலை மாவட்ட தேர்தல் அலுவலர் / ஆட்சித்தலைவர் சதீஷ் வெளியிட்டார். இதில் பாலக்கோடு சட்டமன்ற தொகுதியில் 312 வாக்கு சாவடிகளில் 1,19,611 ஆண் வாக்காளர்களும், 1,17,845 பெண் வாக்காளர்களும், 20 திருநங்கைகளும் ஆக மொத்தம் 2,37,476 வாக்காளர்கள் உள்ளனர். பென்னாகரம் சட்டமன்ற தொகுதியில் 320 வாக்கு சாவடிகளில் 1,26,763 ஆண் வாக்காளர்களும், 1,19521 பெண் வாக்காளர்களும், 9 திருநங்கைகளும் ஆக மொத்தம் 2,46,293 வாக்காளர்கள் உள்ளனர். தருமபுரி சட்டமன்றத் தொகுதியில் 320 வாக்கு சாவடிகளில் 1,29,393 ஆண் வாக்காளர்களும், 1,28,464 பெண் வாக்காளர்களும், 82 திருநங்கைகளும் ஆக மொத்தம் 2,57,939 வாக்காளர்கள் உள்ளனர். பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதியில் 322 வாக்கு சாவடிகளில் 1,27,427 ஆண் வாக்காளர்களும், 1,27,217 பெண் வாக்காளர்களும், 14 திருநங்கைகளும் ஆக மொத்தம் 2,54,658 வாக்காளர்கள் உள்ளனர். அரூர் (தனி) சட்டமன்ற தொகுதியில் 322 வாக்கு சாவடிகளில் 1,21,453 ஆண் வாக்காளர்களும், 1,22,264 பெண் வாக்காளர்களும், 25 திருநங்கைகளும் ஆக மொத்தம் 2,43,742 வாக்காளர்கள் உள்ளனர். தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஐந்து சட்டமன்ற தொகுதிகளில் 1,596 வாக்கு சாவடிகளில் 6,24,647 ஆண் வாக்காளர்களும், 6,15,311 பெண் வாக்காளர்களும், 150 திருநங்கைகளும் ஆக மொத்தம் 12,40,108 வாக்காளர்கள் உள்ளனர் என்று மாவட்ட தேர்தல் அலுவலர்/ ஆட்சித் தலைவர் சதீஷ் தெரிவித்தார்.

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் திமுக இளைஞரணி மாநாடு



கோவை பிப்:24-

தமிழக சட்டசபை தேர்தல் தேதி இன்னும் சில நாட்களில் அறிவிக்கப்பட உள்ளது.தேர்தலை சந்திக்க திமுக,அதிமுக உள்ளிட்ட அனைத்து கட்சிகளும் ஆயத்தமாகி வருகின்றன. இந்நிலையில் திமுக இளைஞரணி மேற்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு மாநாடு கோவை கருமத்தம்பட்டி கனியூர் டோல்கேட் அருகில் நடைபெற்றது. மாநாட்டில் திமுக இளைஞரணி செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் தலைமை தாங்கினார்.

இது குறித்து கூறுகையில் கோவையில் ஒரு லட்சம் பேர் கூடிய மேற்கு மண்டல

இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்புக்கு,கழக இளைஞர்

அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று எழுச்சிமிக்க உரையாற்றினார். இப்போது நடப்பது எட்டு கோடி மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்ற ஒரு போர்.பாசிஸ்டுகள்,அடிமைகள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து வருகிறார்கள்.தமிழ்நாட்டை எப்படியாவது சீரழிக்க வேண்டும் என்று

முயற்சி செய்கிறார்கள்.அதைத் தடுக்க வேண்டிய பொறுப்பு இளைஞர் அணி நிர்வாகிகள் உங்களின் கைகளில் இருக்கிறது என்று குறிப்பிட்டார்.உடன் மேற்கு மண்டல இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி சுங்கச்சாவடி அருகில், ஆல்ப்ஸ் ஹோட்டல் ரெசிடென்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பாக, "பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுக்கும் சட்டங்கள் மற்றும் திட்டங்கள் குறித்த 3 நாட்கள் நடைபெறும் கருத்தரங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் , குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்தார். உடன், ஓசூர் மாநகராட்சி ஆணையாளர் .முகமது சபீர் ஆலம் ஓசூர் சார் ஆட்சியர் .ஆக்ரிதி சேத்தி , மாவட்ட சமூக நல அலுவலர் திர.இரா.சக்தி சுபாசினி உள்ளிட்ட பலர் உள்ளனர்.



# நாகர்கோவில் மாநகராட்சி சாலைக்கு விடியல் வருமா

நாகர்கோவில், பிப்.24-

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கன்னியாகுமரி மாவட்டம் வருகையை முன்னிட்டு மாவட்டத்தில் பல இடங்களில் சாலைகள் சீரமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன; குண்டும் குழியுமான சாலைகளை சீரமைப்பதும், சாலை ஓரங்களில் உள்ள கழிவு மண் மற்றும் குப்பைகளை இல்லாத வகையில் 24 நான்கு மணிநேரமும் தூய்மை படுத்தும் பணிகளும் மிக சிறப்பாக நடைபெற்று வருகிறது. ஆனால் நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட ஸ்காட் கிறிஸ்தவ பள்ளியில் இருந்து டெரிக் சந்திப்பு செல்லும் சாலை பல மாதங்களாக சரி செய்யப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது. இதனால் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கி அந்த வழியாக செல்லும் பள்ளி மாணவர்கள் முதல் இருசக்கர வாகன ஓட்டிகள் பெரும் அவதிக்குள்ளாகி வருவதோடு இருசக்கர வாகன ஓட்டிகள் விபத்தில் சிக்கி தவிக்கும் நிலையும் ஏற்பட்டு வருகிறது. இது தொடர்பாக பல செய்திகள் வெளிவந்தும் நாகர்கோவில் மாநகராட்சி தற்காலிக நடவடிக்கையான ஜல்லி கற்களை கொட்டி செல்கிறது. சாலைகள் அமைக்கும் போது ஏற்கனவே இருந்த மழைநீர் வடிகாலை அடைத்து தார் சாலை போடப்பட்டதால் மழைநீர் செல்ல முடியாத நிலை ஏற்பட்டு சாலைகள் கடுமையாக சேதமடைந்தது.

சாலைகள் அமைக்கும் போது அதிகாரிகள் முறையாக ஆய்வு மேற்கொள்ளாமல் இருப்பதால் இதுபோன்று பல இடங்களில் சாலைகள் சேதமடைந்து காணப்படுகிறது. தமிழக முதல்வர் வருகையை முன்னிட்டாவது இந்த சாலைக்கு ஒரு விடியல் வரும் என பள்ளி மாணவர்கள் முதல் வாகன ஓட்டிகள் வரை எதிர்பார்த்தும் பலன் இல்லாமல் கிடைக்கிறது. தமிழக முதல்வர் நாகர்கோவில் வருகை தரும் போது இந்த சாலையை சீரமைக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள்!

உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை
Whatsapp - ல்
பின் தொடர

# தருமபுரியில் நல திட்ட உதவிகளை அமைச்சர் எம். ஆர் .கே. பன்னீர்செல்வம் வழங்கினார். ஆட்சியர், எம்பி ,எம்எல்ஏ பங்கேற்பு



தருமபுரி பிப். 24-

தருமபுரி மாவட்ட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் இலவச வீட்டுமனை பட்டாக்கள் மற்றும் புதிய திட்டப் பணிகளுக்கு அடிகள் நாட்டுதல், முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தால் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா தருமபுரி ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. இந்த விழாவிற்கு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் தலைமை வகித்தார். தர்மபுரி மாவட்ட ஆட்சியர் சதீஷ் முன்னிலை வகித்தார். விழாவின் 14 புதிய திட்டப் பணிகளுக்கு ரூ.103.80 கோடியில் அடிக்கல் நாட்டி, 60 முடிவுற்ற திட்ட பணிகளை ரூ.45.74 கோடியில் திறந்து வைத்தார். பின்னர் 1,828 பயனாளிகளுக்கு ரூ.14.78 கோடியில் இலவச வீட்டு மனை பட்டாக்கள் மற்றும் 4,115 பயனாளிகளுக்கு ரூ. 27.80 கோடி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மகளிர் விடியல் பயணம் செய்யும் பழைய பேருந்துகளுக்கு பதிலாக புதிய பேருந்து சேவையை 12 வழித்தடங்களிலும், மாற்றி அமைக்கப்பட்ட வழித்தடமான வாழப்பாடி முதல் மண்ணூர் கிராமத்திற்கு பேருந்து சேவை மற்றும் தெருக்கூத்து கலைஞர்கள் நடத்திய கலை விழிப்புணர்வு பேரணியையும், மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கர பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலிகளை அமைச்சர் வழங்கி பேசியதாவது. தமிழக முதல்வர் தமிழ்நாடு மக்களின் முன்னேற்றத்திற்காகவும், நலனுக்காகவும் பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார் . கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்டத்தில் 3,16,810 குடும்ப தலைவிகள் பயனடைந்து வருகின்றனர். விடியல் பயணம் திட்டம் மூலம் தருமபுரி மண்டலத்தில் ரூ.17.75 கோடி மகளிர் கட்டணம் இல்லாமல் பயணம் மேற்கொண்டு உள்ளனர் . மேலும் 4.22 லட்சம் திருநங்கைகள் மற்றும் 19.35 லட்சம் மாற்றுத்திறனாளிகள் கட்டணம் இல்லாமல் பயணம் மேற்கொண்டுள்ளனர். முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் 1,144 பள்ளிகளைச் சார்ந்த 47, 050 தொடக்கப்பள்ளி மாணவ, மாணவிகள் பயனடைந்துள்ளனர். புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் 52,661 மாணவிகள் மாதந்தோறும் ஆயிரம் பெறுகின்றனர். தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் கீழ் 22,531 மாணவர்கள் மாதந்தோறும் ஆயிரம் பெறுகின்றனர். முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தில் 35, 271 வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பயனடைந்து வருகின்றனர் இவ்வாறு அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் தெரிவித்தார் . இந்த நிகழ்ச்சியில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. மணி, பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் ஜி. கே. மணி, நகர மன்ற தலைவர் லட்சுமி, கிட்ட இயக்குனர் ரூபன் சங்கர் ராஜ், முன்னாள் அமைச்சர் பழனியப்பன், முன்னாள் எம்பி தாமரைச்செல்வன், முன்னாள் எம்எல்ஏக்கள் தடங்கம் சுப்பிரமணி, வேடம்மாள், இன்பசேகரன், மனோகரன், முன்னாள் மாவட்ட பொறுப்பாளர் தர்மசெல்வன், மாநில வர்த்தக அணி சத்தியமூர்த்தி, கைம்பெண் நலவாரிய உறுப்பினர் ரேணுகாதேவி, ஆதிதிராவிடர் நலக்குழு உறுப்பினர் சரவணன், டி .ஆர். ஓ. கவிதா, ஆர். டி. ஓ. காயத்ரி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், இந்நாள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## விளாத்திகுளம் அருகே வீரபாண்டிய கட்டபொம்மனின் 267வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாபெரும் மாட்டு வண்டி எல்கை பந்தயம்



விளாத்திகுளம் பிப். 24-

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள சிங்கிலிபட்டி கிராமத்தில் இந்திய விடுதலைக்கு முதல் வீரம் முழக்கமிட்ட வீரபாண்டிய கட்டபொம்மனின் 267 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டும், மாட்டுவண்டி எல்கை பந்தயத்தின் மீது தீராதகாதல் கொண்ட சிங்கிலிபட்டி முருகன் இவர் சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக தமிழகத்தில் நடைபெற்ற பத்தாயிரத்திற்கு மேற்பட்ட பந்தயங்களில் கலந்து கொண்டு சிறந்த சாரதியாக வெற்றிவாகை சூடி வந்துள்ளார். இந்நிலையில் அவரது மகன் மாதவன் கோபிகா திருமண விழாவை முன்னிட்டு மாபெரும் மாட்டு வண்டி எல்கை பந்தயம் நடைபெற்றது.

சின்னமாடு, பூஞ்சிட்டு என இரு பிரிவுகளாக நடைபெற்ற போட்டியில் தூத்துக்குடி,திருநெல்வேலி,ராமநாதபுரம்,விருதுநகர், தேனி உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து சுமார் 30 ஜோடி மாடுகள் போட்டியில் கலந்து கொண்டு சீறிப்பாய்ந்தன. போட்டியானது சிங்கிலிபட்டி கிராமத்திலிருந்து விளாத்திகுளம் வரை நடைபெற்றது. சீறிப்பாய்ந்து சென்ற காளைகளை சாலையின் இரு புறமும் நின்று ஏராளமான பொதுமக்கள் கண்டு ரசித்தனர்.

போட்டியில் வெற்றி பெற்ற மாட்டின் உரிமையாளர் மற்றும் ஓட்டி வந்த சாரதிகளுக்கு, விழாக்குமட்டியின் சார்பாக பரிசுத்தொகை வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## முன்னாள் முதல்வர் ஜெயலலிதா வின் 78 வது பிறந்தநாளை முன்னிட்டு 2000 பேருக்கு நலத்திட்ட உதவி வழங்கும் விழா



இராமநாதபுரம் பிப்,24-

அதிமுக பொதுச் செயலாளர், எடப்பாடி கே.பழனிசாமி ஆணைக்கிணங்க. ராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை அதிமுக ஒன்றியம் சார்பில் முன்னாள் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 78 வது பிறந்த நாளை விழாவையொட்டி மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது இதில் சிறப்பு விருந்தினரான. அதிமுக கழக செய்தி தொடர்பாளர்

நிர்மலா பெரியசாமி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் மற்றும் பொதுக்கூட்டத்திற்கு தலைமை மாவட்ட கழக செயலாளர் எம்.ஏ.முனியசாமி மற்றும் கழக மகளிர் அணி இணைச்செயலாளர் கீர்த்திகா முனியசாமி கழக எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர் கே.சி.ஆனிமுத்து ஆகியோர் இதில் ஒன்றிய கழகச்செயலாளர் சுப.ரத்தனமூர்த்தி,ரவிச்சந்திரன், ,ஆசை இராமநாதன், ஆண்டவர் ஆகியோர் முன்னிலையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது சிறப்பு பேச்சாளர் நிர்மலா பெரியசாமி பேசுகையில் அதிமுக ஆட்சியில் பொதுமக்களுக்கு செய்த நலத்திட்ட உதவிகளை பட்டியலிட்டு பேசினார் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட 2000க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

## தென்காசி காசி விஸ்வநாதர் ஆலயத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் பழனி நாடார் எம்எல்ஏ தலைமையில் இலவச திருமணம்



தென்காசி, பிப்.24-

தென்காசி மாவட்டம் தென்காசி அருள்மிகு ஸ்ரீ காசி விஸ்வநாதர் ஆலயத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் மூன்று தம்பதியினருக்கு இலவச திருமணம் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனி நாடார் தலைமையில் நடைபெற்றது பின்னர் மூன்று தம்பதியினருக்கும் கட்டில், பீரோ ,மெத்தை, தலையணை, சில்வர் பாத்திரங்கள், மிக்சி ,குக்கர் போன்ற சீர்வரிசைகள் சுமார் 75 ஆயிரம் மதிப்பீட்டில் புதுமண தம்பதிகளுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனி நாடார் வழங்கினார் நிகழ்ச்சியில் தென்காசி நகர காங்கிரஸ் தலைவர் மாடசாமி ஜோதிடர், வட்டாரத் தலைவர் பெருமாள், திமுக கிழக்கு ஒன்றிய செயலாளர் அழகு சுந்தரம் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



**தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சிறப்பு தீவிர திருத்த பணி2026 அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் இறுதி வாக்காளர் பட்டியலினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், அவர்கள் இன்று வெளியிட்டார்.**

## கோவை சித்தாபுதூர் பகுதி மக்கள் சென்னை தலைமைச் செயலகம் சென்று வீட்டுமனை பட்டா வேண்டி மனு



கோவை பிப்.24-

கோவை காந்திபுரம் பகுதியில் வசிக்கும் சித்தாபுதூர் சிஎம்சி காலனி பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான தூய்மை பணியாளர் குடியிருப்பு சங்க குழு தலைவர் பி முருகேசன் தலைமையில் 87 ஆண்டு காலமாக நாங்கள் அங்கு வசித்து வருகிறோம் பலமுறை பல இடத்தில் பல ஆண்டுகளாக கோவை மாவட்ட ஆட்சியாளர், மாநகராட்சி ஆணையாளர்,மற்றும் துறை சார்ந்த அரசு அதிகாரிகளிடம் நாங்கள் மனுக்களை கொடுத்தோம். அதற்கு எந்த ஒரு பதிலும் எங்களுக்கு சரிவர கிடைக்கவில்லை ஆகையால் சென்னை தலைமைச் செயலகம் சென்று தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அவர்களிடமும்,துறை சார்ந்த அதிகாரிகளிடமும் எங்களது மனுவை கொடுத்தோம். அங்கு இருந்த தலைமைச் செயலாளர் திரு முருகானந்தம் அவர்களிடம் நேரில் சென்று எங்களது மனுவை கொடுத்து எங்களுக்கு வீட்டுமனை பட்டா கிடைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தோம்.அவரும் எங்களது கோரிக்கையை கேட்டறிந்து துறை சார்ந்த அதிகாரி முதன்மைச் செயலாளர் கார்த்திகேயன் அவர்களிடம் சந்திக்க வைத்தார்.பின்னர் அவரிடமும் எங்களது மனுவை கொடுத்து எங்களது கோரிக்கை வைத்தோம் இந்த மனுவை ஏற்றுக் கொண்ட அதிகாரி உங்களுக்கு உடனடியாக இது சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் பேசி நல்ல முடிவை தருகிறோம் என்று கூறினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் செயலாளர் ராமசாமி, பொருளாளர் ரங்கசாமி, ஆலோசகர் பாபு, மற்றும் சங்க உறுப்பினர்கள் சரஸ்வதி,நாகராஜ், பத்மாவதி, வானதி சரோஜா, மணிகண்டன், சக்திவேல், பாக்கியராஜ், லட்சுமி, பண்ணாரி, அம்மாசை, ஆறுமுகம் ஆகியோர் இருந்தனர்.

## போச்சம்பள்ளி வட்டாச்சியர் அலுவலகம் முன்பு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு வருவாய் கிராம* *ஊழியர் சங்கம் சார்பில் கர்ப்பிணிப் பெண் உட்பட சாலை மறியல் ஈடுபட்ட 13 பேர்* *கைது



போச்சம்பள்ளி , பிப்.24-

தமிழ்நாடு வருவாய் கிராம ஊழியர் சங்கம் சார்பில் கலமுறை ஊதியம்வேண்டி கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக இன்று கவனத்தை ஈர்க்கும் வகையில் கருப்பு பட்டை அணிந்து உள்ளிருப்பு மற்றும் தொடர் வேலை நிறுத்த காத்திருப்பு போராட்டம் இடுபட்டு வந்த நிலையில் இன்று இதில் ஆண்கள் 10 பேர் கர்ப்பிணி பெண் உள்ளிட்ட பெண்கள்3 மொத்தம் 13 பேர் கிராம உதவியாளர்கள் போச்சம்பள்ளி வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக தருமபுரி திருப்பத்தூர் சாலையில் சாலை 9 ஆம்சகோரிக்கைகளை வலியுறுத்தி மறியலில் ஈடுபட்டனர். அவர்களை போச்சம்பள்ளி போலீசார் கைது செய்தனர்.

(சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணியாற்றும் கிராம உதவியாளர்களுக்கு, முறையான காலமுறை ஊதியம் வழங்கி பணிநிரந்தரம் செய்ய வேண்டும். பணியின் போது உயிரிழக்கும் கிராம உதவியாளர்களின் குடும்பத்தினருக்கு, எவ்வித தடையுமின்றி மீண்டும் கருணை அடிப்படையில் வேலை வழங்க வேண்டும். ஏற்கனவே உள்ள பணிகளுடன் கூடுதல் பொறுப்புகளை வழங்கி பணிச்சுமையை அதிகரிக்கக்கூடாது. 2007ஆம் ஆண்டிற்குப் பிறகு பணியில் சேர்ந்தவர்களுக்கு இதுவரை முறையான சிபிஎஸ் (CPS) எண் மற்றும் அதற்கான நிதியுதவி கிடைக்கவில்லை. அதனை உடனடியாக சரிசெய்ய வேண்டும். என்று கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர். எங்களது கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்படா விட்டால், வரும் பிப்ரவரி 27ஆம் தேதி மாநிலம் தழுவிய அளவில் போராட்டத்தை தீவிரப்படுத்த உள்ளோம்,என்று எச்சரித்தனர்.

## திருவெண்ணெய்நல்லூர் அருகே நடந்த தளபதி கோப்பைக்கான கபடி போட்டி ஏனாதிமங்கலம் அணி இறுதிப் போட்டியில் வென்று கோப்பையை தட்டி சென்றது



திருவெண்ணெய்நல்லூர்.பிப்.24-

திருவெண்ணெய்நல்லூர் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் ஏனாதிமங்கலம் கிராமத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் 73வது பிறந்த நாளையொட்டி இரவை பகலாக்கும் மின்னொளியில் தளபதி கோப்பை காண மாவட்ட அளவில் கபடி போட்டிகள் எல்லீஸ் அணைக்கட்டு விளையாட்டு திடலில் 21, 22ந் தேதி ஆகிய இரு தினங்களாக நடைபெற்றன. இதில் மாவட்ட முழுவதும் இருந்து 64 கபடி அணிகள் பங்கேற்றன. இதில் வெற்றி பெற்ற பாக்கம், குமளம், ஏனாதிமங்கலம், வீரபாண்டி ஆகிய நான்கு அணிகள் அரை இறுதி போட்டிகள் நேற்று மாலை நடைபெற்றன. இறுதிப் போட்டியில் பாக்கம், ஏனாதிமங்கலம் அணிகள் மோதியதில் ஏனாதிமங்கலம் கபடி அணியினர் வெற்றி பெற்று முதல் பரிசை பெற்றனர். இதில் முதல் பரிசாக ரூ.20 ஆயிரமும், 2ம் பரிசாரக ரூ.15 ஆயிரமும், 3ம் பரிசாக ரூ.10 ஆயிரமும் மற்றும் நினைவு கோப்பைகளும் வழங்கப்பட்டன.

போட்டிக்கு விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் கௌதமசிகாமணி தலைமை தாங்கினார் திருக்கோவிலூர் நகர மன்ற தலைவர் டி.என்.முருகன் மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் வழக்கறிஞர் தங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு திருக்கோவிலூர் எம்.எல்.ஏ., பொன்முடி பரிசுகள் வழங்கி கௌரவப்படுத்தினார் இதனை தொடர்ந்து 250 பெண்களுக்கு புடவை வழங்கி சிறப்புரை ஆற்றினார் திருவெண்ணெய்நல்லூர் மேற்கு ஒன்றிய செயலாளர் விசுவநாதன், ஒன்றிய பெருந்தலைவர் ஓம்சிவசக்திவேல் வரவேற்புரை ஆற்றினார்கள். இதில் நகர செயலாளர் பூக்கடை கணேசன், ஒன்றிய செயலாளர்கள் கல்பட்டு ராஜா, மும்மூர்த்தி, ஊராட்சி மன்ற தலைவர் விஜயன் மற்றும் பக்தவச்சலு மோகன் கிருஷ்ணமூர்த்தி மோகன்ராஜ் ஏழுமலை சரவணகுமார் நிர்மல்ராஜ் அன்பழகன் வெங்கடேசன் ஆறுமுகம் ராமலிங்கம் பாலகுரு உதயசூரியன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். இந்த கபடி போட்டியினை வாலிபால் மணி சிறப்பாக ஒருங்கிணைத்தார். இறுதியாக மத்திய ஒன்றிய செயலாளர் கை.ரா. சடகோபன் நன்றி கூறினார்.



**கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், இறுதி வாக்காளர் பட்டியலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் , அவர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் வெளியிட்டார். உடன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பொது .கோபு, ஓசூர் மாநகராட்சி ஆணையாளர் .முகமது ஷபீர் ஆலம் உதவி தேர்தல் அலுவலர்கள் .ஆக்ரிதி சேத்தி , திரு.ஷாஜகான், .கீதா ராணி, .பழனி, .அ.அபிநயா, .சிவக்குமார், தனி வட்டாட்சியர் தேர்தல் .சம்பத்து உள்ளிட்ட பலர் உள்ளனர்.**



## பாஜக கோவை மாநகர் மாவட்டத்திற்கு உட்பட்ட ரத்தினபுரி 32 வது வார்டில் பிரம்மாண்ட தெருமுனை பிரச்சாரம்

கோவை பிப்.24-

கோவை மாநகர் மாவட்டத்தில் அமைந்துள்ள கண்ணப்ப நகர் பகுதியில் 32 வது வார்டில் கோவை மாநகர் மாவட்ட தலைவர் ரமேஷ் அவர்களின் அறிவுறுத்தலின்படி கோவை மாநகர மாவட்ட செயலாளர் திருமதி சரஸ்வதி,சக்தி கேந்திர பொறுப்பாளர்கள் மகேந்திரன்,லட்சுமணன்,சீனிவாசன்,நதியா,சத்தியா பாஜக நிர்வாகிகள் ஸ்ரீராம்,பிரவீன் குமார்,துரை உள்ளிட்டோர்

ஏற்பாட்டில் தெருமுனைப் பிரச்சாரம் 32 வார்டுக்குள் மூன்று இடங்களில் நடைபெற்றது .

இதில் பாஜக மாநில விளையாட்டு மற்றும் திறன் மேம்பாட்டு பிரிவு பொறுப்பாளர் திரு ஞிகூஷீ. ஞி.மணிகண்டன் தெருமுனை பிரச்சாரத்தில் கலந்து கொண்ட பொது மக்களுக்கு சிறப்புரை ஆற்றினார். இதில் அதிமுக பிரமுகர் வெந்தாமரை பாலு,அதிமுக 32 வது வார்டு செயலாளர் திரு பூபதி,தமிழக முன்னேற்றக் கழகம் பிரின்ஸ் அண்ணாச்சி, தமிழ் மாநில காங்கிரஸ் மாவட்டச் செயலாளர் ஜெயச்சந்திரன்,

பாஜக ஓபிசி அணி பொதுச் செயலாளர் தவமணி கலந்து கொண்டனர். மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



## தருமபுரி நகர அதிமுக சார்பில் முன்னாள் முதலமைச்சர் பிறந்த நாளை முன்னிட்டு நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்

தருமபுரி பிப்,24-

தருமபுரி நகர அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சார்பில் மாவட்ட கட்சி அலுவலகத்தில் நகர செயலாளர் பூக்கடை ரவி தலைமையில் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது . இந்த கூட்டத்தில் மாவட்ட அம்மா பேரவை செயலாளர் எஸ். ஆர். வெற்றிவேல், மாவட்ட அண்ணா தொழிற்சங்க செயலாளர் பழனிச்சாமி ஆகியோர் கலந்துகொண்டு முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 78 வது பிறந்தநாள் விழாவை நகரத்தில் உள்ள 33 வார்டுகளிலும் சிறப்பாக கொண்டாடப்படுவதை குறித்து நிர்வாகிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினார்கள். இதில் நகர நிர்வாகிகள், வார்டு பிரதிநிதிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# வேலூர் மாவட்டத்தில் 1000 பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்: பயனாளிகள் முதல்வருக்கு நெஞ்சார்ந்த நன்றி



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின், அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் 10,000 முகாம்கள் நலத்திட்டப் பயன்கள் மற்றும் 1.80 இலட்சம் புதிய பயனாளிகளுக்கு சமூக பாதுகாப்புத் திட்டப் பயன்களை வழங்கியதை தொடர்ந்து வேலூர் மாவட்டத்தில் 1000 பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.இரா.சுப்புலெட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின், அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் 10,000 முகாம்கள் நலத்திட்டப் பயன்கள் மற்றும் 1.80 இலட்சம் புதிய பயனாளிகளுக்கு சமூக பாதுகாப்புத் திட்டப் பயன்கள் வழங்கியதை தொடர்ந்து வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.இரா.சுப்புலெட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் (04.02.2026) ஜே.பி.எம். மஹாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சமூக பாதுகாப்பு திட்டத்தின்கீழ் 1000 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

"மக்களிடம் செல் அவர்களோடு வாழ் அவர்களை நேசி" என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கை பாதையில் தமிழ்நாடு அரசு பல்வேறு நலத்திட்டங்களை தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. அவற்றுள் மாபெரும் நலத்திட்டமாக தமிழ்நாட்டில் உள்ள கடைக்கோடி மக்களுக்கும் அவர்கள் அன்றாடம் அணுகும் அரசு துறைகளின் சேவைகள் மற்றும் திட்டங்களை அவர்களின் இல்லங்களுக்கு அருகிலேயே சென்று வழங்க வேண்டும் என்ற சீரிய நோக்கத்திற்காக "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்கள் செயல்படுத்தப்பட்டது.

அதன்படி வேலூர் மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் 15.07.2025 அன்று முதல் 30.09.2025 வரை நகர்ப்புறத்தில் 71 முகாம்களும் மற்றும் கிராமப்புறங்களில் 140 முகாம்களும் ஆக மொத்தம் 211 முகாம்கள் நடத்தப்பட்டு பல்வேறு துறைகளின் கீழ் 1,35,581 மனுக்கள் பெறப்பட்டு 1,32,685 மனுக்கள் தீர்வு காணப்பட்டு 2,896 மனுக்கள் நடவடிக்கையில் உள்ளது.

உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் சமூக பாதுகாப்பு திட்டத்தின்கீழ் முதியோர் ஓய்வூதியத்தொகை, ஆதரவற்ற விதவைகள் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான உதவித்தொகை மற்றும் முதிர்கன்னிகளுக்கான உதவித்தொகைக்கோரி வேலூர் மாவட்டத்தில் மொத்தம் 17,186 விண்ணப்பங்கள் பெறப்பட்டதில், 7,932 தகுதியான விண்ணப்பங்கள் ஏற்பளிப்பு செய்து ஓய்வூதியம் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

இதில் அணைக்கட்டு வட்டத்தில் 969 பயனாளிகளுக்கும், வேலூர் வட்டத்தில் 2620 பயனாளிகளுக்கும், பேர்ணாம்பட்டு வட்டத்தில் 500 பயனாளிகளுக்கும், குடியாத்தம் வட்டத்தில் 1356 பயனாளிகளுக்கும், காட்பாடி வட்டத்தில் 1554 பயனாளிகளுக்கும், கீ.வ.குப்பம் வட்டத்தில் 933 பயனாளிகளுக்கும் என மொத்தம் 7932 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஒப்புதல் செய்யப்பட்டுள்ள மொத்தம் 7932 பயனாளிகளில் வேலூர் வட்டத்தில் 516 பயனாளிகளுக்கும், அணைக்கட்டு வட்டத்தில் 315 பயனாளிகளுக்கும், குடியாத்தம் வட்டத்தில் 65 பயனாளிகளுக்கும் என மொத்தம் 896 பயனாளிகளுக்கு உதவித்தொகைக்கான ஆணைகளை வழங்கினார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 34 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.1,01,800/ வீதம் ரூ.34,61,200/ மதிப்பில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களும், 10 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.14,490/ வீதம் ரூ.1,44,900/ மதிப்பில் கைத்திறன் பேசிகளும், 4 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.1,05,000/ வீதம் ரூ.4,20,000/ மதிப்பில் பேட்டரியால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலியும், 3 மாற்றுத்திறனாளிகளுக்கு திருமண உதவித்திட்டத்தின்கீழ் தலா ரூ.50,000/ மற்றும் 8 கிராம் வீதம் ரூ.1,50,000/ மற்றும் 24 கிராம் தங்க நாணயங்களும் என மொத்தம் 51 பயனாளிகளுக்கு ரூ.41,76,100/ மதிப்பில் நலத்திட்ட உதவிகளையும், சமூக நலத்துறையின் சார்பில் பட்டப்படிப்பு முடித்த 55 பயனாளிகளுக்கு தலா 8 கிராம் தங்கம் மற்றும் ரூ.50,000/ உதவித்தொகை, 12 ஆம் வகுப்பு முடித்த 79 பயனாளிகளுக்கு தலா 8 கிராம் தங்கம் மற்றும் ரூ.25,000/ உதவித்தொகை என மொத்தம் 134 பயனாளிகளுக்கு 1072 கிராம் தாலிக்கு தங்கம், ரூ.47,25,000/ திருமண உதவித்தொகையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்களில் பயனடைந்த பயனாளிகள் தெரிவித்ததாவது

வேலூர் மாவட்டம், கணியம்பாடி பகுதியை சார்ந்த மாற்றுத்திறனாளி திரு.பிரகாஷ், தெரிவித்ததாவது

என்னுடைய பெயர் பிரகாஷ். நான் வேலூர் மாவட்டம் கணியம்பாடி பகுதியில் இருந்து வருகிறேன். என்னுடைய சிறு வயதில் மாடு முட்டியதனால் என்னுடைய முதுகு தண்டுவடம் பாதிப்பு ஏற்பட்டு அன்று முதல் என்னால் நடக்க இயலவில்லை. மேலும் எனக்கு திருமணம் ஆகி இரண்டு ஆண் பிள்ளைகள் உள்ளது. சிறுவயது முதலே என்னால் வெளியே எங்கும் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. வெளியே செல்ல வேண்டுமானால் அடுத்தவர் உதவியை நாடித்தான் செல்ல வேண்டும்.

மேலும் எங்களுடைய பகுதியில் நடந்த உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் எனக்கு முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களால் இயக்கப்படும் பேட்டரியால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலி வேண்டி



மனு அளித்தேன். என்னுடைய நிலைமையை கருத்தில் கொண்டு என்னுடைய மனுவினை பரிசீலினை செய்து இன்று உங்களுடன் ஸ்டாலின் முகாம் நலதிட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டோருக்கான பேட்டரியால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலியினை இன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார். இதன் மூலம் எவரின் உதவி இல்லாமல் என்னால் இனிமேல் தனியாக வெளியே செல்ல இயலும். என்னுடைய அன்றாட வேலைகளும் நானே பார்த்துக் கொள்ள இயலும் இந்த சிறப்பு சக்கர நாற்காலியினை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி

வேலூர் மாவட்டம், காட்பாடி பகுதியை சார்ந்த மாற்றுத்திறனாளி திருமதி ரேவதி, தெரிவித்ததாவது

என் பெயர் ரேவதி. நான் வேலூர் வேலப்பாடி பகுதியில் இருந்து வருகிறேன். நான் ஒரு மாற்றுத்திறனாளி. என்னுடைய கணவர் பால் வியாபாரம் செய்து வருகிறார். எனக்கு சிறுவயது முதலே கால் ஊனம் ஏற்பட்டு என்னால் நடக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. நான் ஒரு இளநிலை பட்டதாரி. நான் ஒரு தனியார் ஆரம்பப் பள்ளியில் ஆசிரியராக வேலை செய்து வருகிறேன். நான் வேலைக்கு செல்ல வேண்டும் என்றால் அடுத்தவரின் உதவியோ அல்லது என்னுடைய கணவரின் உதவியின் பேரில்தான் என்னுடைய நான் வேலைக்கு சென்று வர முடியும். மேலும் எங்கள் பகுதியிலே நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமில் எனக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வேண்டும் என்று மனு அளித்தேன். என்னுடைய மனுவினை அதிகாரிகள் பரிசீலித்து



எனக்கு விரைவில் நேர்காணல் செய்து இன்று நடக்கும் அரசு விழாவில் எனக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட வாகனத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார். இதனால் நான் வெளியே செல்வதற்கும் என்னுடைய குழந்தைகளை பள்ளிக்கு அழைத்து செல்வதற்கும் மிக உதவியாக இருக்கும். என்னுடைய உடல்நிலை கருத்தில் கொண்டு எனக்கு இந்த வாகனத்தை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கோடி நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்

இந்நிகழ்ச்சியில் குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி வி.அமுலு விஜயன், வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், ஒன்றியக்குழுத்தலைவர்கள் திருமதி அமுதா ஞானசேகரன் (வேலூர்), திரு.நு.எ.சத்தியானந்தம் (குடியாத்தம்), திருமதி திவ்யா கமல்பிரசாத் (கணியம்பாடி), பேர்ணாம்பட்டு நகர்மன்ற தலைவர் திருமதி பிரேமா, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திரு.சி.மாறன், வேலூர் வட்டாட்சியர் திரு.இல. வடிவேல், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் திருமதி மம்தா குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், வேலூர்.**

## தஞ்சாவூர் அடுத்துள்ள திருவையாறு ஒளவை மழலையர், தொடக்கப் பள்ளியில் 32 ஆம் ஆண்டு விழா



தஞ்சாவூர் பிப். 24-

தஞ்சாவூர் அடுத்துள்ள திருவையாறு ஒளவை மழலையர், தொடக்கப்பள்ளியில்தலைமையாசிரியை கோகிலா வரவேற்றார், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் கலியபெருமாள் தலைமை வகித்தார். நகராட்சி கவுன்சிலர் புவனாபாபு, பெற்றோர் ஆசிரியர் கழக துணைத் தலைவர் சிவசங்கர் முன்னிலை வகித்தனர் .

ஒளவை அறக்கட்டளை செயலாளர் முகில்வேந்தன் கலை நிகழ்ச்சிகளை தொடங்கி வைத்தார். பள்ளி தாளாளர் கண்ணகி கலைவேந்தன் சிறப்பு விருந்தினர்களுக்கு நினைவு பரிசு வழங்கினார்.

வல்லம் பெரியார் மணியம்மை அறிவியல் தொழில்நுட்ப நிறுவன பேராசிரியர் சுகுமாரன் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். கலை அருவி ரஞ்சித்குமார் ஆசிரியர்களுக்கு பரிசு வழங்கினார்.

சிறந்த பெற்றோருக்கான விருது ஐந்தாம் வகுப்பு மாணவர் ஸ்ரீ சாய்ஹரியின் பெற்றோர் ஹேமச்சந்திரன் மகாலட்சுமி ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

பள்ளி மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடந்தது.

நிகழ்ச்சியை உதவி தலைமையாசிரியை மேரிவெர்ஜீனியா, ஆசிரியை தீபா தொகுத்து வழங்கினர் .

கலை நிகழ்ச்சிகளை கலைஅருவிரஞ்சித் குமார் ஒருங்கிணைத்தார். ஆசிரியை தனலட்சுமி நன்றி கூறினார்.

பட விளக்கம் திருவையாறு ஒளவை மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளி ஆண்டு நிறைவு விழாவில் பெரியார் மணியம்மை அறிவியல் தொழில்நுட்ப நிறுவன பேராசிரியர் சுகுமாரன் சிறந்த பெற்றோருக்கான விருதினை மாணவர் ஸ்ரீ சாய்ஹரியின் பெற்றோர் ஹேமச்சந்திரன் மகாலட்சுமி ஆகியோருக்கு வழங்கினார் அருகில் ஒளவை அறக்கட்டளை செயலர் முகில்வேந்தன் மற்றும் பலர் உள்ளனர்

## ஆவடி பகுதியில் 11 மின் திருட்டுகள் கண்டுபிடிப்பு: ரூ.8.78 லட்சம் அபராதம் விதிப்பு

சென்னை. பிப்.24-

ஆவடி பகுதியில் அதிகாரிகள் நடத்திய ஆய்வில் 11 மின் திருட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு, நுகர்வோருக்கு ரூ.8.78 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது.இதுகுறித்து மின் வாரியம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தின் சென்னை மையம், வடக்கு, தெற்கு, மேற்கு, செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் அமலாக்க அதிகாரிகள் கடந்த 11ம் தேதி ஆவடி பகுதியில் கூட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது 11 மின் திருட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதையடுத்து, மின் நுகர்வோருக்கு ரூ.8,77,593 அபராதம் விதிக்கப்பட்டது.புகார் தெரிவிக்கலாம்:

மேலும், சம்பந்தப்பட்ட நுகர்வோர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு குற்றவியல் நடவடிக்கையை தவிர்க்க முன்



வந்து அதற்குரிய சமரசத் தொகையாக ரூ.36 ஆயிரம் செலுத்தியதால், அவர்கள் மீது காவல் நிலையத்தில் புகார் ஏதும் பதிவு செய்யப்படவில்லை.

மின் திருட்டு தொடர்பான தகவல்களை சென்னை அமலாக்க செயற்பொறியாளரிடம் கைபேசி 94458 57591 என்ற எண்ணில் தெரிவிக்கலாம். இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## குருக்கள்பட்டியில் துணை மின் நிலையம் கட்டும் பணி ராஜா எம்எல்ஏ அடிக்கல் போட்டு துவக்கி வைத்தார்



சங்கரன்கோவில். பிப்.24-

தென்காசி மாவட்டம்சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதி மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றியம் குருக்கள்பட்டியில் மின்சார துணை மின் நிலையம் அமைக்க

ரூ4.84 கோடி நிதி ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு முதலமைச்சர் முக ஸ்டாலின் உத்தரவிட்டார்.மின்சார துணை மின் நிலையம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சி நடந்தது . திருநெல்வேலி மண்டல மேற்பார்வை பொறியாளர் அகிலாண்டேஸ்வரி தலைமை வகித்தார். செயற்பொறியாளர் பாலசுப்பிரமணியன், சிவில் செயற்பொறியாளர் விசாகாவாசுகி, செயற்பொறியாளர் ரவி முன்னிலை வகித்தனர் ஒன்றிய செயலாளர் பெரியதுரை வரவேற்றார். நிகழ்ச்சியில் தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்துகொண்டு புதிய துணை மின் நிலையம் அமைக்கும் பணியை அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.இதில் உதவி செயற்பொறியாளர் பூபேஸ்ராஜ் மோகன்,இளமின் பொறியாளர் கவிதா,மின்கழக தொமுச செயலாளர் மகாராஜன் , மேலநீலிதநல்லூர் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் ராஜதுரை, சங்கரன்கோவில் நகர செயலாளர் பிரகாஷ், மற்றும் திமுக பொறுப்பாளர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீட்டை பின்பற்றாத மத்திய அரசை கண்டித்து மார்ச் 3 ஆம் தேதி மத்தி ய அரசு அலுவலகங்கள் முன்ஆர்ப்பாட்டம் தி.க. தலைவர் கி.வீரமணி அறிவிப்பு




தஞ்சாவூர் பிப்.24-

தஞ்சாவூர் திலகர் திடலில் திராவி டர் கழக இளைஞர் அணி திராவிட மாணவர் கழக மாநில மாநாடு திராவிடர் மாணவர் கழக மாநில செயலாளர் செந்தூரப் பாண்டியன் தலைமையில் நடைபெற்றது திராவிட கழக மாவட்ட காப்பாளர் அய்யனார் மாவட்ட தலைவர் அமர் சிங் மாவட்ட செயலாளர் அருண கிரி மற்றும் நிர்வாகிகள் முன்னி லை வகித்தனர். திராவிட கழக இளைஞரணி மாநில துணைச் செயலாளர் வெற்றி குமார் வரவேற்புரையாற்றினார். மாநாட்டில் மத்திய அரசு நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திராவிடர் கழக தலைவர் கி. வீரமணி பேசியதாவது,

சட்டசபை தேர்தலில் மு.க.ஸ்டாலின் வெற்றி பெறுவது உறுதி. மு.க.ஸ்டாலினுக் கு முதல்வராக பதவிப்பிரமாணம் செய்து வைக்க கவர்னர் ஆர்.என். .ரவி இருக்க வேண்டும். வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீட்டை பின்பற்றாத மத்திய அரசை கண்டித்து மார்ச் 3 ஆம் தேதி மத்திய அரசு அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெறும் என கூறினார். மாநாட்டில் திமுக துணை பொது செயலாளரும், முன்னாள் மத்திய அமைச் சருமான ஆ.ராசா, முன்னாள் மத்திய இணை அமைச்சருமான திமுக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினருமான எஸ்.எஸ்.பழனி மாணிக்கம்,மத்திய மாவட்ட செயலாளர் துரை.சந்திர சேகரன்,முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம் பாராளுமன்ற உறுப்பினர் முரசொலி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் குத்தாலம் கல்யாணம் மாநகராட்சி மேயர் சண். இராமநாதன்,துணை மேயர் அஞ்சுகம் பூபதி திராவிடர் கழக பொதுச் செயலாளர் வி. அன்புராஜ் துணை தலைவர் கலி.பூங்குன்றன், இளைஞர் அணி மாநில செயலாளர் நாகை நாத்திகம் பொன்முடி உட்பட பலர் கலந்து கொண்டனர் மாவட்ட திராவிட கழக இளைஞரணி தலைவர் பிரகாஷ் நன்றியுரையாற்றினார்.

## ஊத்தங்கரை தாலுகா அலுவலகம் முன்பு போராட்டத்தில் ஈடுபட்ட 42 பேரை போலீசார் கைது செய்தனர்




கிருஷ்ணகிரி, பிப்.24-

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரையில், திமுக அரசு தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, சங்கத்தினர் தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில், நேற்று தாலுகா அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டக் கோஷங்கள் எழுப்பிய அவர்கள், பின்னர் ஊர்வலமாக ஊத்தங்கரை நான்கு ரோடு சந்திப்புக்கு சென்று சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியில் போக்குவரத்து சிறிது நேரம் பாதிக்கப்பட்டது.

போராட்டம் வட்டத் தலைவர் திருப்பதி தலைமையில் நடைபெற்றது. வட்டச் செயலாளர் செல்வம் வரவேற்றார். மாநில செயற்குழு உறுப்பினர் கலைவாணன், மாவட்ட செயலாளர் வேடி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் துணைத் தலைவர் சக்திவேல், வட்ட பொருளாளர் மாரியப்பன் உள்ளிட்ட 42 பேர் கலந்து கொண்டனர்.


சாலை மறியலில் ஈடுபட்ட 42 பேரையும், ஊத்தங்கரை இன்ஸ்பெக்டர் முருகன் தலைமையிலான போலீசார் கைது செய்து, ஊத்தங்கரை திருமண மண்டபத்தில் தங்க வைத்தனர்.

போராட்டக்காரர்கள் தங்களது கோரிக்கைகளை அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தினர்.

## சிறாருக்குச் சமூக ஊடகத் தடை: நிதானம் அவசியம்

இந்தியா, பிப். 24-

இந்தியாவில் 16 வயதுக்குட்பட்டோர் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தக் கட்டுப்பாடுகள் விதிப்பது குறித்து மத்திய அரசு தீவிரமாகப் பரிசீலித்துவருவது மிக முக்கியமான நகர்வு. இவ்விஷயத்தில்,



கவனமான அணுகுமுறையை அரசு கையாள்வது அவசியம். இன்றைய நவீன உலகில் குழந்தைகள், இளையோர் மீது சமூக ஊடகங்கள் ஏற்படுத்திவரும் எதிர்மறைத் தாக்கம் உலக அளவில் பேசுபொருளாகி உள்ளது.

இளம் வயதினரிடமிருந்து சமூக ஊடகங்களை விலக்கிவைக்க வேண்டும் எனக் குரல்கள் ஒலித்துவரும் நிலையில், இதில் முன்னோடி நாடாக, 16 வயதுக்கு உள்பட்ட சிறார் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதைக் கடந்த டிசம்பர்10இல் ஆஸ்திரேலியா தடைசெய்தது.

இதன்படி, அந்நாட்டுச் சிறார் யாரும் புதிதாகச் சமூக ஊடகக் கணக்கு தொடங்க முடியாது; பயன்பாட்டில் உள்ள கணக்குகள் நீக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து பிரான்ஸ் நாட்டில் 15 வயதுக்குட்பட்டோருக்கு இதே தடை அமலுக்கு வர உள்ளது. டென்மார்க், ஸ்பெயின், பிரிட்டன் ஆகிய நாடுகளிலும் இத்தகைய கட்டுப்பாடு தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.